Environmental Criticism: Need and Application

Dr. J.S. Jemima Jeyapriya
Associate Professor, Research Department of Tamil
Lady Doak College, Madurai

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

DOI:
https://doi.org/10.5281/zenodo.17346730

Abstract
The complexities that mature within society, along with the debates, reflections, and theoretical frameworks surrounding them, play a crucial role in shaping ideas. Discourses, reflections, and theories concerning the environment have emerged from this very context. In particular, environmental concerns within literary studies have generated significant interest, giving rise to a new literary theoretical framework called "Environmental Criticism". This approach critically analyzes contemporary literary works through the lens of environmental awareness, examining the fundamental ecological elements embedded within them. By doing so, it contributes substantially to public understanding of environmental issues. Environmental criticism not only interprets literature but also helps in raising ecological consciousness among society. Its emergence, necessity, and applications in approaching literary works with an environmental perspective in contemporary Tamil literature are the main focus of this study.

Keywords: *Environmental Criticism, Literary Theory*

References

1. I. Mathinakumar N. (2016). Theories of Criticism and Multidimensional Reading, Kayalkavi Publications, Chennai.
2. Selvakumar M. (2012). Contemporary Trends in Tamil Short Stories, Pattarai Publications, Madurai.
3. Panjangam K. (2011). Literature and Theories of Criticism, Annam Publications, Thanjavur.
4. Vimalanandam M.S., Majasekharan C.S. (2009). Foundations of Literary Criticism, Chennai.
5. Web Reference: https://example.com (Accessed 26/11/2015)

சூழலியல் திறனாய்வு: தேவையும் பயன்பாடும்

முனைவர் ஜீ.சு. ஜெமிமா ஜெயப்பிரியா
இணைப் பேராசிரியர், தமிழ் உயராய்வு நடுவம்
டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை

ஆய்வுச் சுருக்கம்
சமூகத்தில் முதிர்ந்து நிற்கிற சிக்கல்களே, அவை குறித்த கருத்தாடல்கள், சிந்தனைகள் மற்றும் கோட்பாடுகளின் உருவாக்கத்திற்குப் பெரிதும் காரணமாகின்றன. சுற்றுச்சூழலியல் குறித்த சொல்லாடல்களும், சிந்தனைகளும், கோட்பாடுகளும் இதனடிப்படையில் தோற்றம் பெற்றவைதான். குறிப்பாக, இலக்கியக் கல்வியில் சுற்றுச்சூழல் குறித்த அக்கறைகள் பெரும் ஆர்வத்தோடு உரையாடலுக்கு உள்ளாகின்ற தன் விளைவு தான் "சூழலியல் திறனாய்வு" என்னும், புதிய ஓர் இலக்கியக் கோட்பாடு குறித்த மொழியாடல் முன்னுக்கு வரக் காரணம் எனலாம். சுற்றுச்சூழல் கோட்பாடுகளின் பின்னணியில் சமகாலப் படைப்புகளை விமர்சிப்பதும், அப்படைப்புகளில் ஊடுருவியுள்ள சூழலியலின் அடிப்படைக் கூறுகளை இனங்காண்பதும், சமூகவெளியில் சுற்றுச்சூழல் குறித்த புரிதலை மேம்படுத்துகிறதற்குப் பேருதவியாய் அமைவதால் "சூழலியல் திறனாய்வு" சமகாலத் தமிழாய்வுப் போக்கில் பெரும்பங்களிப்பை நல்குவதாய் அமைகிறது. சூழலியல் திறனாய்வின் தோற்றம், தேவை, சூழலியல் நோக்கில் படைப்பிலக்கியங்களை அணுகும் முறைகள், சமகாலத் தமிழாய்வில் இதன் பயன்பாடு ஆகியவை குறித்து ஆராய்வதாக இக்கட்டுரைஅமைகிறது.
திறவுச் சொற்கள்: *சூழலியல் திறனாய்வு, இலக்கியக் கோட்பாடு*

முன்னுரை

சுற்றுச்சூழல் சிக்கல்கள் குறித்த கருத்தாடல்கள், அச்சிக்கல்களைப் போலவே இன்று பெருகி நிற்கிறதை, கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக வெளிவந்துள்ள சூழலியல் சார்ந்த நூல்கள் புலப்படுத்துகின்றன. 20-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 21-ஆம் நூற்றாண்டின்தொடக்கபதின்ஆண்டுகளிலும், எழுது பொருளும் பேசுபொருளும் சூழல் சார்ந்தே இயங்கி வந்திருக்கின்றமைக்குச் சமகாலப் படைப்புப் பிரதிகளே சான்றுகளாகின்றன. சமூகத்தில் ஒரு சிக்கல் முதிர்ந்து நிற்கும் போது அதற்கேற்ப இலக்கியக் கல்வியும் தன்னளவில் செயலாற்ற நேர்கிறது. சான்றாக, தேசியம் என்ற கட்டமைப்பு மேலெழுந்த போது, தேசிய இலக்கியமும் திறனாய்வும் அதன் விளைச்சலாக அமைந்தன. பாரதியாரின் பங்களிப்பு, இலக்கியத் தளத்தில் இப்படித்தான் அமைந்தது. நமது காலகட்டத்தில் அளவுக்கு மீறிய தொழிற்சாலைகளின் பெருக்கம், அதன் தொடர்ச்சியாக எரிசக்திகளின் தேவைக்காக அணு உலைகளின் பெருக்கம், நச்சுகக்கும் பல்வேறு இயந்திரப் பொருட்களின் உற்பத்தி, பெருநகரங்களின் உருவாக்கம், இதனால் நிலம், காற்று, நீர், வெளி முதலிய இயற்கை ஆற்றல்கள் மாசுபடுதல், உலகம் வெப்பமடைதல் என, பூமியின் இருப்பிற்கே ஆபத்து வரும் சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே, "இந்தப் பூமியைக் காப்போம்; வரும் தலைமுறைக்கு வாழ்விடம் அளிப்போம்" என்கிற கருத்தாக்கங்கள் முன்னுக்கு வருகின்றன. வாழ்க்கையின் அனைத்து வடிவங்களிலும் இந்தப் பேராபத்தினை உணர்ந்தே தீர வேண்டிய நெருக்கடி முற்றியுள்ளது. எனவே, இலக்கியக் கல்வியிலும் இந்தச் சுற்றுச்சூழல் குறித்த அக்கறைகள் பெரும் ஆர்வத்தோடு உரையாடலுக்கு

உள்ளாகின்றன. இதன் விளைவாகத் தான் "சூழலியல் திறனாய்வு" என்கின்ற புதிய ஓர் இலக்கியக் கோட்பாடு குறித்த மொழியாடல் முன்னுக்கு வந்துள்ளது (பஞ்சாங்கம், க., இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப. 352) என்கிறார் திறனாய்வாளர் க.பஞ்சாங்கம்.

சுற்றுச்சூழல் நெருக்கடிகளுக்கான தீர்வுகளைக் கண்டறிவதற்கு, முந்தைய - இன்றைய தலைமுறையினரின் செயற்பாடுகளையும் அவற்றின் விளைவுகளையும் உற்றுநோக்க வேண்டியது அவசியமானதாகிறது. அப்பொழுது தான், இயற்கைக்கெதிரான செயல்களைத் தடுக்கவும், இயற்கையைப் பாதுகாப்பதற்கென மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைச் செயல்படுத்தவும் இயலும். எனவே, காலந்தோறும் வெளிவந்துள்ள படைப்புப் பிரதிகளைத் திறனாய்வுக்காட்படுத்தி, சூழலியல் நோக்கோடு மீளாய்வுக்கு உட்படுத்தும் போது தான், மனித சமூகம் செய்த தவறுகளையும்/ செய்யத் தவறியவைகளையும் கண்டறிய வாய்ப்பு அமையும் என்பதால், சூழலியல் திறனாய்வு என்கிற இலக்கிய அணுகுமுறையானது மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது.

சூழலியல் திறனாய்வு - விளக்கம்

தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக உலகம் மாசடைந்து வருதல் என்பது, வருங்காலத்திற்குப் பெருந்தீங்கை விளைவிக்கும் என்கிற அச்சம், மலை, கடல், காடு போன்ற இயற்கைச் சூழல்களைக் காப்பதற்கும், தட்பவெட்ப மாறுபாடுகளைத் தடுப்பதற்குமான முயற்சிகளை மேற்கொள்ள மனிதரை உந்தித்தள்ளியது. இதன் விளைவாக, உலகளாவிய நிலையில் விதவிதமான இயக்கங்கள் பல தோன்றி, சுற்றுச்சூழலியல் ஆய்வுகளுக்கு வித்திட்டன எனலாம். இன்றைய தேவையான சுற்றுச்சூழல் கல்வி, இலக்கியப் பகுப்பாய்விற்கும் இடமளிப்பதால், அது இலக்கியத் தளத்திலும் எதிரொலித்து, "சுற்றுச்சூழல் திறனாய்வு" (Eco criticism) அல்லது "பசுமைத் திறனாய்வு" (Green criticism) என்று பெயரிட்டு ஆராயப்படுகிறது.

சூழலின் ஓர் அங்கமான மனிதர், சூழலை எவ்வாறு மாற்றியமைக்கின்றனர் என்பதும், மனித உடல் நலத்தை/ வாழ்வியலை, மாறும் சூழல் எவ்வாறு மாற்றியமைக்கின்றது என்பதும் சூழலியலின் முக்கிய ஆய்வுவினாக்களாக இருக்கின்றன. சூழலியல் திறனாய்வானது அவ்வினாக்களுக்கான விடையைத் தேடும் கோட்பாடாகவே, சூழலியல் தொடர்பான இலக்கிய ஆய்விற்கு வழிகாட்டுகிறதாய் அமைந்திருக்கிறது. சூழலியல் திறனாய்வு (Eco criticism) என்பது, இலக்கியத்திற்கும் இயற்கைச் சூழலுக்கும் உள்ள உறவினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு ஆகும். 1990களில் அமெரிக்காவில் தோற்றம் பெற்ற இத்திறனாய்வு, பின்னர் பிறநாடுகளுக்கும் பரவியது. புவியின் இயற்கைச்சூழல் தொடர்பான சிக்கல்களைச் சரியாகக் கையாள்வதற்கு, மனிதருக்கும் இயற்கைச் சூழலுக்கும் உள்ள தொடர்புகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற கருதுகோளே சூழலியல் திறனாய்வின் அடிப்படையாக உள்ளது (http://ta.wikipedia.org/s/3iz9, 26/11/2015). "சூழலியல் திறனாய்வு" குறித்துக. பஞ்சாங்கம் விளக்கமளிக்கையில், "புதிதாக வளர்ந்து வரும் இத்திறனாய்வு, பன்முகப்பட்ட துறைகளும் கலந்த ஒரு கல்விமுறை என்பதனால் பல்வேறு விளக்கங்கள், பல்வேறு கோணத்தில் சொல்லப்படுகின்றன. ஆனாலும், அமெரிக்காவில் உள்ள "நெரேடா" (Nerada) பல்கலைக் கழகத்தில் "இலக்கியமும் சுற்றுச்சூழலும்" என்ற தனித்துறையில் பேராசிரியராகப் பணியாற்றும் "செரில்கிலாட்பெல்டி" (Cheryil Glotfelty) என்பார் அளித்த விளக்கமே இதன் அடிப்படை வரையறையாகக் கொள்ளப்படுகிறது. அவர் பின்வருகிற வகையில் இதை வரையறை செய்கிறார்: "இலக்கியத்திற்கும்

சுற்றுச்சூழலுக்கும் உள்ள உறவினைக் கற்பதே சூழலியல் திறனாய்வு" என்கின்றார். ஆனால், சுற்றுச்சூழல் என்பதற்கும் இயற்கை என்பதற்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது. எனவே, "இலக்கியத்திற்கும் இயற்கைக்கும் உள்ள உறவினைக் கற்பதே "சூழலியல் திறனாய்வு" என வரையறுப்பதே பொருத்தமாக இருக்கும் (பஞ்சாங்கம், க., இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப. 353) என்பதாகக் கருத்துரைக்கிறார்.

இலக்கியத்திற்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பு என்று குறிப்பிடும்போது, இந்தப் பூமியில் மனிதர்கள் மட்டுமல்ல; வேறு பல உயிரினங்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்த உயிரினங்களைக் குறித்தெல்லாம் உயிரியல் அறிஞர்கள் மிக நுட்பமாக ஆராய்ந்து, பல்வேறு தகவல்களை வழங்கியுள்ளனர். பன்முகப்பட்ட உயிரினங்களின் இருப்பு என்பது எவ்வாறு சூழலைச் சமப்படுத்திக் கொள்ளப் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையெல்லாம் அறிவியல் பூர்வமாக விளக்கியுள்ளனர். இந்தத் தகவல்களையெல்லாம் இலக்கியத்தை வாசிப்பதற்கும், கற்றுத் தருவதற்கும், படைப்பதற்கும், திறனாய்வு செய்வதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் (பஞ்சாங்கம், க., இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப. 360) என்கிறார்க. பஞ்சாங்கம். பூமியானது அனைத்துயிர்களுக்கும் பொதுவானது என்கிற சிந்தனையை நினைவூட்டவும் நிலைநிறுத்தவும் இத்திறனாய்வானது வழி வகுக்கிறது. அதோடு, "சுற்றுச்சூழல் திறனாய்வு என்பது இலக்கியத்தில் உள்ள இயற்கையை ஆராய்வதன்று; இது ஓர் இயற்கை சார்ந்த உலகப்பார்வை. மனித இனத்தோடு மனிதன் அல்லாதவைகளையும் அவற்றின் சுற்றுச்சூழல்களையும் ஒரே இனமாக இணைத்து, மனித இனத்தைப் பெருக்கிக் காட்டும் முயற்சியாகும். இத்தகைய பார்வையில், இயற்கை உயிரினங்களில் ஓர் உயிராக மட்டுமே மனிதன் தன்னைக் கருதிக் கொள்ள வேண்டும். எந்த விதத்திலும் மற்ற உயிர்களை விட மேலானவன் என்றோ, சிறப்பிற்குரியவன் என்றோ புனைந்து கொண்டு, தம் வாழ்வைப் புண்ணாக்கக் கூடாது என்கிற தெளிவுகிடைக்கிறது. சூழலியல் திறனாய்வின் மிக இன்றியமையாத பார்வை இது. மரத்தையும், ஆற்றையும், நீர்நிலைகளையும், மலைகளையும், நாயையும், எலியையும், சேவலையும், மாட்டையும், பூக்களையும் தெய்வமாகப் பாவனை செய்து கொண்டாடிய இந்திய மரபிற்குச் சூழலியல் திறனாய்வு பெரிதும் ஒத்துப்போவதைப் பார்க்க முடிகிறது (பஞ்சாங்கம், க., இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப. 360) என்கிற க. பஞ்சாங்கத்தின் கருத்துரையும், "சூழலியல் திறனாய்வென்பது, இயற்கைக்கும் இலக்கியத்திற்கும் உள்ள உறவைக் கற்றல், இயற்கையை மையப்படுத்திய படைப்புகளை முதன்மைப்படுத்தல், இலக்கியங்களில் வெளிப்படும் இயற்கை சார்ந்த தன்மைகளை முன்வைத்தல் என்பதோடு மட்டுமன்றி, இயற்கையின் பேராற்றலை முதன்மைப்படுத்தல் போன்றவற்றையும் முன்னிறுத்துகின்றது. இவை மனித மையச்செயல்பாடுகளால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் - இயற்கையழிவுகளை முன்வைத்து, மனிதன் முதன்மையல்ல - இயற்கையே மையமானது எனும் கருத்தியலை உருவாக்குகின்றது. இயற்கை/ உயிரினங்களின் விடுதலைக்குமான பாதையாகவும் அமைகிறது. எனவே தான், அது பல்வேறு துறைகளுடனும் கோட்பாடுகளுடனும் கை கோர்த்துச் செல்வதாயுளது(செல்வக்குமார், மு., வனஜா, சி., (தொ.ஆ.), ஜவகர், க., (க.ஆ.), தமிழ்ச் சிறுகதைகளின் சமகாலச் செல்நெறிகள், "சூழலியல் நோக்கில் தமிழ்ச் சிறுகதைகள்", ப.114) என்கிற க. ஜவகரின் கருத்துரையும், சூழலியல் திறனாய்வு குறித்த

தெளிவான பார்வைகளை முன் வைக்கிறதாயிருக்கின்றன.

இலக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள தொடர்பை அறிவதன் மூலம், "உயிரினங்களின் பன்மயத் தன்மையில் தான் பூமியின் சமன்நிலை காக்கப்படுகிறது' என்கிற சிந்தனையானது வலுபெறுகிறது. மேலும், சூழலியல் சார்ந்த இலக்கியங்களை இனங்காணவும், இலக்கியங்கள் வெளிப்படுத்தும் சூழலியல் சார்ந்த அக்கறைகளை வெளிக்கொணரவும், சுற்றுச்சூழல் நெருக்கடி நிலையை இலக்கியங்கள் சுட்டிக்காட்டுவதன் வழி, சமூகமாற்றங்களைமுன்வைப்பதோடு, "மனிதமையச் சிந்தனை'யில் மாற்றத்தை ஏற்படுத்தி, "இயற்கை முதன்மையானது; தனித்துவமானது" என்கிற "சூழல் மையச் சிந்தனை'யை வலியுறுத்தவும் இச்சூழலியல் திறனாய்வு உதவுகிறது. புவியின் இயற்கைச் சூழல் தொடர்பான சிக்கல்களைச் சரியாகக் கையாள்வதற்கு, மனிதருக்கும் இயற்கைச் சூழலுக்கும் உள்ள தொடர்புகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற கருதுகோளே சூழலியல் திறனாய்வின் அடிப்படையாக உள்ளது.

சூழலியல் திறனாய்வு: தோற்றமும், வளர்ச்சியும்

"சூழலியல் திறனாய்வு" (Eco criticism) என்ற சொற்கூட்டை முதன்முதலில் பயன்படுத்தியவராக "வில்லியம்ரூக்கர்ட்" (William Rueckert) என்பார் கருதப்படுகிறார். இவர் 1978-இல் தான் எழுதிய "இலக்கியமும் சூழலியலும்: சூழலியல் திறனாய்வில் ஒரு சோதனை" (Literature and Ecology : An Experiment in Ecocriticism) என்கிற கட்டுரையில் தான் இச்சொற் கூட்டைப் பயன்படுத்தியதாகக் க.பஞ்சாங்கம் குறிப்பிடுகிறார். கிட்டத்தட்ட பத்தாண்டுகளாக இது குறித்து யாரும் பேசாத சூழலில், 1989-இல் நடந்த மேற்கத்திய இலக்கியக் கழகக் கூட்டத்தில், அப்பொழுது ஒரு கல்லூரி மாணவியாக இருந்த "செரில்கிலாட்பெல்டி' தான் (Cheryil Glotfelty), வில்லியம் ரூக்கர்ட்டின் அந்தச் சொற் கூட்டை மீண்டும் பயன்படுத்திச் சூழலியல் திறனாய்விற்குத் தன் கட்டுரையின் மூலம் உயிர்கொடுத்தார். மேலும், இவர் "ஹெரால்டுப்ரோம்" (Herold Fromm) என்பாருடன் இணைந்து, சூழலியல் திறனாய்வு குறித்து, மிகவும் அடிப்படையான, பெரிதும் பயன்படக்கூடிய "சூழலியப் பெண்ணியப் படைப்புலகம்: சூழலிய இலக்கியச் சுவடுகள்' (The Ecocriticism Reader : Landmarks in Literary Ecology, University of Georgia Press, 1996) என்கிற ஒரு கட்டுரைத் தொகுப்பினைக் கொண்டுவந்தார். 1992-இல் அமெரிக்காவில் நிறுவப்பட்ட இலக்கியம் மற்றும் சுற்றுச்சூழலுக்குமான கல்வி குறித்த சங்கத்தில் (The Association for the Study of Literature and Environment & ASLE) துணை நிறுவனராக இருந்து செயல்பட்டார். இச்சங்கம் 1993-இல் தனக்கென ஓர் இதழும் கொண்டு வந்தது. இவ்வாறு, சுற்றுச்சூழல்திறனாய்வில்"செரில்கிலாட்பெல்டி" முக்கியமான கல்வியாளராக அறியப்படுகிறார்.

"டேவிட்மாசல்" (David Mazal) என்பார், சூழலியல் திறனாய்விற்கு ஒரு முக்கியமான பங்களிப்பு செய்தவராகிறார். இவர், "ஒரு நூற்றாண்டுத் தொடக்ககாலச் சூழலியல் திறனாய்வுகள்" (A Century of Early Eco Criticism & 1864 & 1964) என்றதொரு கட்டுரைத் தொகுப்பு நூலை வெளியிட்டதன் மூலம், சூழலியல் திறனாய்விற்கு ஒரு வரலாற்று முகத்தை உருவாக்கினவராக அறியப்படுகிறார். இச்சூழலில் தான் இலக்கிய உருவாக்கத்தில் தொடர்ந்து இயற்கைக்கும் மனிதருக்குமான உறவு குறித்த தேடல், ஒரு பெரும் வெளியாகச் செயல்பட்டு வந்துள்ளது என்கிற உண்மையானது வெளிக் கொணரப்பட்டது. தொடர்ந்து, "லாரன்ஸ்பௌல்" (Lawrence Buell) என்பவரால், இது ஒரு முக்கியமான இலக்கிய இயக்கமாக வளர்த்தெடுக்கப்பட்டது. "சுற்றுச்சூழல் திறனாய்வின் எதிர்காலம்"

என்ற அவருடைய நூல், "பின்அமைப்பியல்" கோட்பாட்டையும் பயன்படுத்திக் கொண்டு இத்திறனாய்விற்குச் செறிவூட்டியது. மேலும், சூழலியலும் பெண்ணியமும், சூழலியலும் அறமும், சூழலியலும் அரசியலும், சூழலியலும் பொருளாதாரமும் முதலிய தலைப்புகளில் ஆராய்ந்து, சூழலியலைப் பேரளவில் வளர்த்தெடுத்தது. அவருடைய மற்றொரு நூலான "சுற்றுச்சூழல் கற்பனைகளும் அழியும் பூமி குறித்த இலக்கியங்களும்" என்ற நூலும் சூழலியல் கோட்பாட்டிற்குப் பெரிதும் பங்களிப்பைச் செய்துள்ளது. சூழலியல் திறனாய் வின்மையப் புள்ளியாக விளங்கும் நிலம், வெளி, மொழி, கற்பனை, அரசியல், அறம் முதலியவை குறித்து விரிவாக ஆராய்கிறது இந்நூல். இவ்வாறு, சூழலியல் திறனாய்வின் தோற்றம் குறித்த செய்திகளைக் க.பஞ்சாங்கம் தனது "இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்" என்கிற நூலில் விரிவாக விளக்கிச் செல்கிறார்.

சூழலியல் திறனாய்வின் அணுகுமுறைகள்: தேவையும் பயன்பாடும்

சூழலியல் திறனாய்வின் மூலம் இலக்கியத்தை எவ்வாறெல்லாம் அணுகலாம் என்பதற்கு மது.ச.விமலானந்தம் மற்றும் ச. இராஜசேகரன் ஆகியோர் "இலக்கியத் திறனாய்வியல்" (2009) என்கிற நூலில், "சூழல் திறனாய்வு" விளக்கப் பகுதியில் சில கருத்து நிலைகளை முன்வைத்துள்ளனர். அக்கருத்துக்களும் அவற்றின் வழிப் பெறப்பட்ட சூழலியல் கூறுகளும் பின்வருமாறு நிரல்படுத்தப்பட்டுள்ளன. அவை:

இதுவரையில் எழுதப்பட்ட இலக்கியங்களோ, ஆராயப்பட்ட திறனாய்வுகளோ, மாந்தருக்கு முக்கியம் கொடுத்துயாக்கப்பட்டவை ஆகும். இதனைத் தான் ஆங்கிலத்தில் "Anthropo Centrism' என்று இயம்புவர். இப்போது யாக்கப் பெறும் சிலபல இலக்கியங்களும், ஆய்வுகளும், சுற்றுப்புறத்துக்கும், சூழலுக்குமே முக்கியத்துவம் தந்து எழுதப்பட்டவை ஆகும். இந்த முறையினை ஆங்கிலத்தில் "Eco Centrism' என்று கூறுவர் (விமலானந்தம், மது.ச., இராஜசேகரன், ச., இலக்கியத் திறனாய்வியல், ப.204) என்கிற கூற்றின் மூலம் பெறப்படுகிற, "சுற்றுப்புறத்துக்கும் சூழலுக்கும் முக்கியத்துவம் தந்து எழுதப்பட்ட இலக்கியங்களை இனங்காணுதல்' என்கிற சிந்தனையானது, சூழலைமைய மிட்ட படைப்புகளைப் பகுத்தறிய உதவுகிற சூழலியல் கூறுகளில் ஒன்றாய் அமைந்திருக்கிறதை உணர முடிகிறது.

மண்ணில் வாழும் மாந்தர்தாமே இலக்கியம் படைக்கின்றனர். அவர்கள் நன்றாய் இருந்தால் தானே நல்லிலக்கியங்கள் பல்கும். சிறந்த இலக்கியங்கள் செழிக்கும். அவர்கள் சுற்றுப்புறச் சூழலால் பாதிக்கப்பட்டு நலம் குன்றின், அவர்களின்று பிறக்கும் இலக்கியங்கள் நல்லதாக அமையாவே என்ற தவிப்பு, இலக்கிய வாணர்களிடமும் திறனிகளிடமும் தோன்றத் தொடங்கின. இதன் விளைவே, சுற்றுச்சூழல் திறனாய்வு (விமலானந்தம், மது.ச., இராஜசேகரன், ச., இலக்கியத் திறனாய்வியல், ப.203)

என்னும் இக்கருத்தின் வழி, 'இலக்கிய நலமானது சூழல் நலத்தின் அடிப்படையில் அமையுமென்பதை வலியுறுத்துதல்'' என்கிற சிந்தனையானது பெறப்படுகிறது. அவ்வக் காலத்திற்குத் தேவையான சீர்திருத்தத் சிந்தனைகளைப் படைப்பின் வழி, சமூகத்திற்குக் கடத்துகிற படைப்பாளியின் ஆரோக்கியமே, சமூகத்தின் ஆரோக்கியத்தைக் காக்க வழிவகுக்கும் என்பதால், "சுற்றுச்சூழல் தூய்மையே சமூகத்தூய்மைக்கு அடிப்படை' என்பதை இக்கருத்தாக்கம் வலியுறுத்து கிறதாய் அமைந்திருக்கிறது.

தொழில் புரட்சிக்கு முன் - பின் அமைந்த இருநிலைகளையும் ஒப்பிட்டும் உறழ்ந்தும் உற்றுநோக்கும் நோக்கு, இயல்பிலேயே எல்லோர்க்கும் எழவே

செய்யும். இரு காலகாட்டங்களிலும் அரும்பிய இலக்கியங்களின் வேறுபாடும் மாறுபாடும் எவருக்கும் தெற்றெனவே தோன்றும். அந்தத் தூய, மாசற்ற கால இலக்கியங்களின் மாட்சியும், இந்த மாசுற்ற காலச்சூழலில் விளைந்த இலக்கியங்களின் காட்சிகளையும் ஒப்பிடும் திருப்பு முனையில் - மாறும் காலத்தில் நாம் இருக்கிறோம். எனவே, இருநிலைகளையும் எண்ணும், எடைபோடும் - கணிக்கும் கால கட்டத்தில் நாம் இருப்பதால், முந்தைய நன்மையும், பிந்தைய நல மின்மையும் நன்றாக நமக்கு விளங்கும். இதனால் இரு காலகட்ட இலக்கியங்களின் மதிப்பும், நிறைகுறையும் நன்றாகவே நெஞ்சம் உணரும் (விமலானந்தம், மது.ச., இராஜசேகரன், ச., இலக்கியத் திறனாய்வியல், ப.204). என்கிற கூற்றின் மூலம், "தொழிற்புரட்சிக்கு முன் - பின் எழுந்த அல்லது மரபு - நவீன இலக்கியங்களை ஒப்பிட்டு நோக்கி, சூழலியலின் முந்தைய - பிந்தைய நிலைகளின் வேறுபாடு - மாறுபாடுகளை ஆராய்தல்" என்கிற சிந்தனையானது, இன்றைய நடப்பியல் சுற்றுச்சூழல் நெருக்கடிகளுக்கான காரணங்களைக் கண்டறிவதற்குப் பேருதவி புரியும் என்பதில் ஐயமில்லை.

சுற்றுப்புறச் சூழலால் - மாசால், இலக்கியங்கள் எப்படிப் பாதிக்கப்படக் கூடும்என்றெல்லாம்சிந்திக்கத்தலைப்பட்ட தன்விளைவாக, மறக்கப்பட்ட இயற்கைக் கவிஞர் "வோர்ட்ஸ்வொர்த்" போன்றோரின் இயற்கை ஈடுபாடு எல்லாம் மறுபரிசீலனை செய்யப்படலாயிற்று (விமலானந்தம், மது. ச., இராஜசேகரன், ச., இலக்கியத் திறனாய்வியல், ப.202). என்கிற கூற்றின் மூலம் "சுற்றுச் சூழல் பின்னணியில் இலக்கியங்களை மதிப்பிடுதல்" என்கிற சூழலியற்கூறும், இலக்கியங்களில் சூழலியலைப் பொருத்திக் காண்பதற்கான உத்திகளாக நூலாசியர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன.

இக்கருத்து நிலைகளின் அடிப்படையில் இலக்கியங்களை ஆராய்வதன் மூலம், இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மனிதசமூகம் பெற்ற நன்மைகளையும், இயற்கைக் கெதிரான மனிதச் செயல்பாடுகள் உண்டாக்கிய தீயவிளைவுகளையும் பகுத்தாராயவும், சமூக விழிப்புணர்வை உண்டாக்கவும் சூழலியல் திறனாய்வானது வழியமைத்துக் கொடுக்கும் என்பதே இதன் பயனாகும்.

சூழலியல் திறனாய்வின் மூலம் இலக்கியத்தை எவ்வாறெல்லாம் அணுகலாம் என்பதற்குக்க. பஞ்சாங்கம், தனது "இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடு களும்" (2011) என்கிறநூலில், "சூழலியல் திறனாய்வு" விளக்கப் பகுதியில், சில கருத்து நிலைகளை நிரல்படுத்தித்தர முயன்றுள்ளார். அவை பின்வருமாறு:

1. ஒருமொழியில் இடம்பெற்றுள்ள புகழ்பெற்ற இலக்கியங்களைச் சூழலியல் பார்வையில் அணுகி, அந்த இலக்கியங்களில் "இயற்கை உலகம்" எவ்வாறு அடையாளப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதில் கவனத்தைக் குவித்து ஆராய்தல்
2. இலக்கியத்தில் சூழலியல் சார்ந்த கருத்தாக்கங்கள் பாடுபொருளாகி இருக்கும் தன்மையை வெளிக் கொணர்தல்
3. இயற்கையைப் பாடுதல் என்பதையே குறியாகக் கொண்டு, பாடிப்புகழ் பெற்ற கவிஞர்களின் கவிதைகளைச் சூழலியல் நோக்கில் விளக்குதல்
4. உயிரியல் ஆய்வு மூலம் கிடைத்த, பல்வேறு நுட்பமான தகவல்களை முன்னிறுத்தி, வட்டார இலக்கியங்களை மட்டுமல்லாமல் பயண இலக்கியம், நினைவுக் குறிப்புகள், கட்டுரைகள் ஆகியவற்றையும்ஆராய்தல்
5. வாழ்வில் ஒவ்வொன்றும் சமூகக் கட்டுமானத்தினாலும், மொழியின் கட்டுமானத்தினாலும், நிர்ணயிக்கப்பட்டவை என்ற கோட்பாட்டுப் பார்வையிலிருந்து

வெளியேறி, சூழலியல் திறனாய்வின் அணுகுமுறையானது "இந்த இயற்கை நம்மை விடமேலானது, நமக்குப் புறத்தே தனியாக இயங்குவது' என்ற கோணத்தில், இலக்கியக் கல்வியை நடத்திச் செல்லுதல்

இதன்வழி, சூழலியல் திறனாய்வானது, இயற்கையைக் குறித்ததான தெளிவான புரிதலை வெளிக்கொணர முயல்கிறதாகக் காணப்படுகிறது.

சூழலியல் திறனாய்வுக் கொள்கைக்கு முன்னோடிகளாகக் கருதப்படுகிற செரில்கிலாட்பெல்டி, டேவிட்பாசல், லாரன்ஸ்பௌல், மெர்சன்போன்றோர், நவீனத் துவக் கவிதைகளில் மேற்கின் தொழிற்புரட்சியும், நகர்மயமாதலும் மனிதரை அந்நியமாக்கிய சிந்தனையை முன்வைத்து உருவாக்கிய மாதிரிகளை/சூழலியல் திறனாய்வின் முக்கியக் கருத்துக்களை, ந.இரத்தினக்குமார் தனது "திறனாய்வுக் கோட்பாடுகளும் பன்முக வாசிப்புகளும்" (2016) என்கிற நூலில் கவனப்படுத்தியுள்ளார். அவை பின்வருமாறு:

- மனிதமைய வாதத்தை மறுத்தல்
- மானுடத்தை இயற்கையை நோக்கித் திருப்புதல்
- பசுமை இலக்கியத்தை வளர்த்தல்
- இயற்கை மானுடத்தை விடமேலானது. அது நமக்குப் புறத்தே தனியாக இயங்குவது
- நவீன உலகக் கட்டமைப்பில் சுற்றுச் சூழலின் சிதைவுகளை விவாதித்தல்
- இலக்கியங்களில் பதிவுபெற்றுள்ள இயற்கை குறித்த சொல்லாடல்களை மறுஆக்கம் செய்தல்
- இலக்கியக் கல்வியையும் சூழலியல் கல்வியையும் இணைத்தல்
- பிற உயிரினங்களிலிருந்து மனிதயினம், எவ்வகையிலும் உயர்ந்ததில்லை என்பதை நிறுவுதல்
- சமகாலச் சூழல்மாசுபாடுகளைக் கடுமையாக மறுப்பதோடு, போராடுவதற்கு இலக்கியத்தையே கருவியாக்குதல்
- உலக வளர்ச்சிகளுக்குப் பின் இருக்கும் சர்வதேச அரசியலைக் கவனப்படுத்துதல்

என்கின்ற வகையில் அவை அமைகின்றன.

முடிவுரை

சமகாலத் தமிழாய்வுலகில் சூழலியல் திறனாய்வு அணுகுமுறையானது, இலக்கியங்களைச் சூழலியல் நோக்கில் அணுகி, ஆராய்வதற்கான வழிமுறைகளை முன்மொழிகின்றதாகக் காணப்படுகின்றது. இலக்கியங்களில் இயற்கை உலகம் அடையாளப் படுத்தப்பட்டுள்ள விதத்தை ஆராய்வதற்கும், உயிரினச் சமத்துவக் கோட்பாட்டினை மையப்படுத்துவதற்கும், மானுடத்தை இயற்கையை நோக்கித் திருப்புவதற்கும் இத்திறனாய்வு அணுகுமுறையானது பேருதவி புரியும் என்பது தெளிவாகிறது.

பார்வை நூல்கள்

1. இரத்தினக்குமார், ந., (2016), திறனாய்வுக் கோட்பாடுகளும் பன்முக வாசிப்பும், கயல்கவின் பதிப்பகம், சென்னை.
2. செல்வக்குமார், மு., வனஜா, சி., (தொ.ஆ.), (2012), தமிழ்ச் சிறு கதைகளின் சமகாலச் செல்நெறிகள், கருத்து=பட்டறை வெளியீடு, மதுரை,
3. பஞ்சாங்கம், க., (2011), இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர்.
4. விமலானந்தம், மது .ச., ராஜசேகரன், ச., (2009) இலக்கியத் திறனாய்வியல், பாரிநிலையம், சென்னை.
5. http://ta.wikipedia.org/s/3iz9, 26/11/2015